**PRESS RELEASE no. 379** **dt 23.5.08**

**STUDY TOUR TO OTHER STATES FOR TAMIL NADU FISH FARMERS**

The valedictory function of the ten days study tour to other states organized by the Fisheries Department under the National Agriculture Development Programme (NADP) for the benefit of Tamil Nadu Fish Farmers was held on 21.05.2008 at Fisheries Staff Training Institute, Chennai. The Joint Director of Fisheries (Regional) Chennai presided the function, interacted with the farmers and issued certificates.

The Department of Fisheries is organizing a ten days study tour to the places of fisheries importance in other states such as Andhra Pradesh, Orissa and West Bengal to benefit 300 Tamil Nadu Fish Farmers at an estimated cost of Rs.18.00 lakhs with an aim to give exposure on recent / modern technologies in fish culture so as to enhance the unit fish production in Tamil Nadu. The study tour will be organized in ten batches and in two focused area i.e. Inland Fish Culture and Coastal Aquaculture. The beneficiary farmers for the training will be identified district-wise and the entire study tour expenditure will be met by the Government under National Agriculture Development Programme (NADP).

The Commissioner of Fisheries, Thiru. Shambhu Kallolikar, I.A.S., flagged off the first batch of farmers study tour comprising the beneficiaries from Kancheepuram, Thiruvallur, Cuddalore and Vilupuram on 12.05.2008 from Chennai. The Commissioner of Fisheries in his speech during the inaugural function advised the farmers to utilize this opportunity to collect the latest vital information on fish culture and match their fish production against the highest productivity achieved by their counter parts in other states.

The team visited private fish farms / Government Institutions at Kakinada, Bheemavaram, Nellore in Andhra Pradesh and Central Institute of Freshwater Aquaculture (CIFA) at Bhubaneswar in Orissa. The Farmer's study tour feedback revealed that the visit was an eye opener to correct their present practices on scientific lines and will definitely help them to increase their production as well as their income.

In the valedictory function held on 21.5.08 representatives of fish farmers thanked the Government for having given them chance to learn the fish culture practices undertaken in other States. They assured of implementing the advanced technologies in their farms for the betterment of inland fishery wealth.

Earlier Dr. P. Reena Selvi, Principal / Deputy Director of Fisheries, Staff Training Institute, Chennai welcomed the farmers. Thiru K. Selvan, Assistant Director of Fisheries / Team Leader of the Study Tour proposed vote of thanks.

******

Issued by:

DIPR, Chennai – 9.

செய்தி வெளியீடு எண்.379 நாள்.23.5.2008

## தமிழ்நாடு மீன்வளத்துறை

## மீன்வளர்ப்போருக்கான பிற மாநில கல்விச்சுற்றுலா

## பத்திரிக்கைச் செய்தி

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மீன்வளத் துறையின் மூலம் தமிழக மீன் வளர்ப்போர் பயன்பெறத் தக்க வகையில் 10 நாட்கள் பிற மாநிலங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. அதன் நிறைவு நாள் நிகழ்ச்சி 21.5.2008 அன்று மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. அதில் திரு. ஆர். தில்லைகோவிந்தன், மீன்துணை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை அவர்கள் தலைமையேற்று கல்விச் சுற்றுலா மேற்கொண்ட மீன்வளர்ப்போருக்கு சான்றிதழ் வழங்கினார்.

தமிழகத்தின் மீன் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கென மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிப் பணிகள் குறித்து மீன் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் மீன் வளர்ப்போர்களும் அறிந்து கொள்ள தமிழக அரசு தற்போது வழிவகை செய்துள்ளது. இதன்படி மத்திய அரசின் வேளாண் துறை அமைச்சகத்தின் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 300 மீன் வளர்ப்போர்களை பிற மாநிலங்களான ஆந்திர பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் உள்ள மத்திய மாநில மற்றும் தனியாரால் நிர்வகிக்கப்படும் மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் மீன்பண்ணைகளை பார்வையிட 10 நாட்கள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாடு மீன்துறை ஆணையர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., முதல் குழு கல்வி சுற்றுலாவை 12.05.2008 அன்று தொடங்கி வைத்தார். மீன்துறை ஆணையர் தனது தலைமையுரையில் மீன் வளர்ப்போர் இவ்வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் மீன் வளர்ப்பில் பிற மாநிலங்கள் கையாளும் முறையினை அறிந்து அதற்கு தக்கவாறு அதிகப்படியான மீன் உற்பத்தியை பெருக்கிடவும் ஆலோசனை வழங்கினார். முதல் குழுவில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட மீன் வளர்ப்போர் தேர்வு செய்து அனுப்பி வைக்கப்பட்டனர்.

முதல் குழு ஆந்திர பிரதேசம் மற்றும் ஒரிசா மாநிலங்களிலுள்ள தனியார் மீன் பண்ணைகள் மற்றும் மத்திய மாநில அரசு சார்ந்த நிறுவனங்களுக்குச் சென்று அங்கு செயல்படுத்தப்படும் நன்னீர் மீன் / இறால் வளர்ப்பு முறைகள் குறித்து அறிந்து வந்தனர். மேலும் அவர்கள், இக்கல்விச் சுற்றுலா அறிவியல் பூர்வமான மீன் வளர்ப்பு முறைகளை அறிந்திட ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது எனவும் தாங்கள் அங்கு தெரிந்து கொண்ட மீன் வளர்ப்பு நடைமுறைகளை எதிர் வரும் காலங்களில் தங்களது மீன் வளர்ப்பு பண்ணைகளில் முறையாக செயல்படுத்தி மீன் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் வருமானத்தை ஈட்டிட வாய்ப்பாக இருக்கும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

முன்னதாக நிறைவு நாள் நிகழ்ச்சியில் மீன்துறை பணியாளர் பயிற்சி நிலைய முதல்வர் / மீன்துறை துணை இயக்குநர், முனைவர் ப்பி. ரீனா செல்வி, மீன் வளர்ப்போர்களை வரவேற்று உரையாற்றினார். மீன்துறை உதவி இயக்குநர் திரு. கா. செல்வன் நன்றியுரை நல்கினார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.